முருகப்பெருமான் துணை

**மகான் சந்திரபகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.04.2023, புதன்கிழமை

1. தருமனே கலியுக ராஜனே
தவபலம் கொண்ட தேசிகனே
பெருமைபட சந்திர பகவானும்
புகலுவேன் அனுகூல ஆசி
2. ஆசிதனை சோபகிருது தகர்திங்கள்
ஆறாம் திகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 06 ம் நாள், 19.04.2023 புதன்கிழமை)
தேசமெங்கும் நன்மை காண உரைப்பேன்
தேசிகன் வழிகாட்டும் உண்மை நெறி
3. நெறியாம் சன்மார்க்க நெறிதனை
நிலவுலகில் மக்கள் ஏற்றுவர
வறுமை துன்பம் விலகியே
வள்ளல் தன்மை பெருகியே
4. பெருகியே கலியினில் தருமபலம்
பெருகி மக்களிடை தயவாய்
முருகப்பெருமான் ஆசி அருளால்
முழுமை ஞானம் வந்தடையும்
5. அடையவே எங்கும் அரங்கன்
ஆசிபெற்ற நல் மக்களே
படைகளாகப் பெருகி நன்கு
பாருலகம் அமைதி பாதுகாப்பு பெறும்
6. காப்பான தலைமைகளுடன்
கண்ணியமிக்க அதிகாரிகளும்
ஒப்புகொண்டு நிரம்பி இனிதே
ஒவ்வொரு துறைகளும் வளரும்
7. வளரும் தேவைக்கு மேலாக
வளர்ச்சிக்கண்டு இனிதே
வளரும் மலரும் மக்களின்
வாழ்வாதாரமும் முன்னேறும்படி

8. முன்னேற்றம் தரும் ஞானமாம்
முருகப்பெருமானே அருளும்
நன்னெறி வழிகள் தன்னை
நம்பிவர ஞானம் பெறுவதுடன்
9. பெறுவதுடன் இனி பிறவா
பெரும் பேறுதனை கண்டு
வருங்காலம் தனை வழிநடத்தும்
வல்லமைமிக்க ஞானிகள் ஆக
10. ஆகவே மாற்றம் ஏற்றம்
அனைத்தும் கண்டு தேறுவர்
வகைபட ஞானிகள் படை
வையகம் தன்னில் நிரம்பிட
11. நிரம்பிட அரங்க ஞானியின்
நிலவுலக அவதார நோக்கம்
வரமாக உலகில் பூர்த்தியாகும்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—